# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.23/2018 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2018ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 04/12/2018

பெயர் - ராதிகா தந்தை/கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>முதல் விசாரணை</u> :- நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். 2ம் வாதி என்னுடைய மகன் ஆவார். இவ்வழக்கில் நான் எனக்காகவும் 2ம் வாதிக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். எனது பக்க முதல் விசாரணையை நிருபண பிரமாண பத்திரிக்கையாக தாக்கல் செய்கின்றேன். 17.01.2016 தேதியிட்ட என்னுடைய கணவரின் இறப்பு சான்றிதழ் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.1 ஆகும். 28.11.2017 தேதியிட்ட என்னுடைய மகன் அர்ஜீனின் இறப்பு சான்றிதழின் அசல் வா.சா.ஆ.2 ஆகும். என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது வா.சா.ஆ.3 ஆகும். என்னுடைய மகனின் ஆதார் அடையாள அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது வா.சா.ஆ.4 ஆகும். 05.01.2018 தேதியிட்ட 4ம் பிரதிவாதி எனக்கு வழங்கிய மேலெழுத்தின் அசல் வாச.ா.ஆ.5 ஆகும். என்னுடைய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது வா.சா.ஆ.6 ஆகும். என்னுடைய வருமான வரி கணக்கு அட்டையின் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது வா.சா.ஆ.7 ஆகும். 27.07.2017 தேதியிட்ட 3ம் பிரதிவாதி வழங்கிய கடிதத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.8 ஆகும். 20.01.2018 தேதியிட்ட 3ம் பிரதிவாதி வழங்கிய படிவத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.9 ஆகும். 20.01.2018 தேதியிட்ட 3ம் பிரதிவாதி வழங்கிய குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விவரத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.10 ஆகும்.

(வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது)